நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ!

EFFORT TNPSC



தேர்வு எண் - 2 ( தமிழ் + நடப்புநிகழ்வுகள் + கணிதம் )

1. நாளும் நன்றாக படித்து நீ முன்னேற வேண்டும் என்று பாடியவர் யார் ?

அ) கண்ணதாசன் ஆ) முடியரசன் இ) பாரதிதாசன் ஈ) வாணிதாசன்

2. சாயினும் சான்றாமை குன்றாமை இம்மூன்றும் தூஉயம் என்பார் தொழில் - இதில் தூஉயம் எனும் சொல்லின் இலக்கணக்குறிப்பு கூறுக

அ) இசைநிறையளபெடை ஆ) இன்னிசையளபெடை இ) சொல்லிசையளபெடை ஈ) ஒற்றளபெடை

3. ஆய்லராக இல்லாவிட்டாலும் இராமனுஜம் குறைந்தபட்சம் ஒரு ஐக்கோபி" என்று கூறியவர் யார் ?

அ) சூலியன் கக்சூலி ஆ) லிட்டில்வுட் இ) பேராசிரியர் டி,பெல் ஈ) லார்ட்மெண்ட்லாண்ட்

4. பொருத்துக

A) உதயம் - 1) தேன்
B) மதி - 2) கதிரவன்
C) நறவம் - 3) கடல்
D) சலதி - 4) குழந்தை
E) மதலை - 5) அறிவு

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| அ | 2 | 5 | 1 | 3 | 4 |
| ஆ | 2 | 5 | 1 | 4 | 3 |
| இ | 5 | 2 | 1 | 3 | 4 |
| ஈ | 5 | 2 | 3 | 1 | 4 |

5. ஊமைகளாய் செவிடர்களாய் குருடர்களாய் வாழ்கிறோம்; ஒரு சொல் கேளிர்" என முழங்கியவர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) முடியரசன் ஈ) சுரதா

6. பின்வருவற்றின் தவறாக பொருந்தியுள்ளது எது,எவை ?

1)தலை வணங்கினான் - இரண்டாம் வேற்றுமைத் தொகை
2)வேலன் மகன் - ஆறாம் வேற்றுமைத் தொகை
3)ஊர் நீங்கினான் - ஐந்தாம் வேற்றுமைத்தொகை
4)செங்குட்டுவன் சட்டை - ஆறாம் வேற்றுமை தொகை

அ) 1,2மட்டும் ஆ) 3மட்டும் இ) 1,4மட்டும் ஈ) 1,3,4 மட்டும்

7. செய்யுள் இயற்றும் இலக்கணத்துக்கு --------எனப் பெயர்?

அ) அணியிலக்கணம் ஆ) சொல் இலக்கணம் இ) பொருள் இலக்கணம் ஈ) யாப்பிலக்கணம்

Download more model question papers visit www.tnpsctamil.in

8. தம் கல்லறையில் ,இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என எழுதவேண்டுமென்று தமது இறுதிமுறியில் எழுதி வைத்தவர்?

அ) வீரமா முனிவர் ஆ) ஜி.யு போப் இ) கால்டுவெல்ஸ் ஈ) முனைவர் எமினோ

9. குமரகுருபர் இயற்றாத நூல்?

அ) நீதிநெறிவிளக்கம் ஆ)அழகர்சாமி பிள்ளைத்தமிழ்

இ) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ஈ) மதுரை கலம்பகம்

10. இவற்றில் எது நேர்க்கூற்று அல்ல?

அ) தமிழ்,சங்கத்தமிழ் நூலைப்படி என்று கவிஞர் கூறினார்

ஆ) பாரதிதாசன் தமிழ் என் உயிர் என்பேன் என்றார்

இ) பழத்தை தனக்குக் கொடுக்குமாறு கபிலனை வேலன் கேட்டான்

ஈ) வேல்விழி நன்றாக படித்துத் தேர்வில் முதன்மை பெறு ,என்று ஆசிரியர் அறிவுரை கூறினார்.

11. அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்க வந்த இன்பப் பெருக்கே - எனப் பாடியவர் ?

அ) வள்ளலார் ஆ) தாயுமானவர் இ) பாரதிதாசன் ஈ) கண்ணதாசன்

12. இலக்கண குறிப்பு தருக : ஊரனே ?

அ) இடப்பெயர் ஆ) பெயரெச்சம் இ) அசைச்சொல் ஈ)விளித்தொடர்

13. வாழிய செந்தமிழ் வாழ்கநற் றமிழர் -யார் கூற்று ?

அ)பாரதிதாசன் ஆ)திருஞானசம்பந்தர் இ)பாரதியார் ஈ)திருநாவுக்கரசர்

14. இவற்றில் தவறானது ?

அ)இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகும்.

ஆ)எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.

இ)வன்தொடர் குற்றியலுகத்தின்பின் வல்லினம் மிகும்.

ஈ)பெயரெச்ச,வினையெச்சத்தொடர் ஆகியவற்றை அடுத்து வல்லினம் மிகாது

15. வீட்டுக்குள் முடங்கி கிடந்த பெண்களையும் சமூகநீதிக்கான போராளிகளாக ஆக்கியவர் ?

அ)காந்தி ஆ)பெரியார் இ)பாரதிதாசன் ஈ)பாரதியார்

16. தனக்கென தனிச்சிறப்பும் பல மொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மொழி?

அ) தமிழ்மொழி ஆ) கிளைமொழி இ) மூலமொழி ஈ) அனைத்தும்

17. மக்கள் மேம்பாட்டை அடியொற்றிய கவிதை யாருடையது?

அ) பாரதி ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) இராஜகோபாலன்

**Download more model question papers visit www.tnpsctamil.in**

18. பொருந்தாத ஒன்றைக் காண்க:

அ) பிச்சமூர்த்தி ஆ) புதுமைபித்தன் இ) செல்லப்பா ஈ) இராஜகோபாலன்

19. மன்சுபேதார் பட்டம் ஆனந்தரங்கர் பெற்ற வருடம் ?

அ) 1729 ஆ) 1739 இ) 1749 ஈ) 1719

20. கேட்டார் பிணிக்கும் தகையவாய் கேளாரும் விரும்பும் வண்ணம் பேசுவதில் வல்லவர்?

அ) திருவள்ளுவர் ஆ) இரா பி சேதுபிள்ளை இ) அண்ணா ஈ) வள்ளலார்

21. மணித்தக்காளி, அகத்திகீரை, வல்லாரை

அ.நினைவாற்றல் , பல்சார்ந்த வியாதி, வாய்ப்புண்

ஆ.வாய்ப்புண்,நினைவாற்றல் ,பல்சார்ந்த வியாதி

இ.வாய்ப்புண், பல்சார்ந்த வியாதி வியாதி,நினைவாற்றல்

ஈ.நினைவாற்றல்,வாய்ப்புண், பல்சார்ந்த வியாதி

22. அரு , உரு பொருள்

அ. வடிவம்,இடி ஆ. இடி,வடிவம். இ. உருவமுடையது, வடிவம் ஈ. உருவமற்றது,வடிவம்

23. இலக்கணகுறிப்பு பொருந்தாதது

அ.ஆழ்நரகு - பண்புதொகை ஆ.வீழ்கதிர் - வினைத்தொகை

இ.பயன்தெரிபுலவர் - வினைத்தொகை ஈ.காமத்தீ - உருவகம்

24. பள்ளிப்பறவைகள்"

(I)இந்நூலின் ஆசிரியர் துரை.மாணிக்கம்

(ii)இந்நூலில் உள்ள பாடல்கள் தென்மொழி,தமிழ்சிட்டு,தமிழ்நிலம் ஆகிய இதழ்களில் வெளிவந்தன

(iii)மூன்று பிரிவுகளை கொண்டது

(iv)இந்நூலின் ஆசிரியர் புலவரேறு என அழைக்கப்படுகிறார்

அ. i , iv தவறானவை ஆ. ii மட்டும் தவறு

இ. i , iii தவறற்றவை ஈ. அனைத்தும் சரி

25. ஆகுபெயர், தளை, தொடை, பொருள்கோள், அடி - எத்தனை வகைப்படும் ?

அ. 16, 5, 8, 8, 7 ஆ. 7, 5, 8, 16, 8 இ. 16, 7, 8, 8, 5 ஈ. 7, 16, 5, 8, 8

26. ஏமம் - பொருள்

அ. காலை ஆ.இரவு இ.பொன் ஈ. சூரியன்

27. சிந்தும் விருத்தமும் விரவி வர பாடப்படும் நூல் எது ?

அ. கலிங்கத்துப்பரணி ஆ. மதுரைக் கலம்பகம் இ. உலா ஈ. பள்ளு

Download more model question papers visit www.tnpsctamil.in

28.மாலைக்கால வருணனை எந்த சருக்கம் ?

அ. அழைப்பு சருக்கம் ஆ. சூதாட்டம் இ. அடிமை ஈ. சபதம்

29.புதுக்கவிதை மலர் பார்த்தவர் யார் ?

அ. கவிக்கோ ஆ. பாரதிதாசன் இ. பாரதியார் ஈ. வாணிதாசன்

30.மடந்தை வயது

அ. 12-13 ஆ. 20-25 இ. 14 - 18 ஈ. 14 - 19

31. தொழிற்பெயரைப் பொருத்து தவறான ஒன்று.

அ. தொழிலுக்குப் பெயராய் வரும். ஆ. படர்க்கை இடத்தில் வரும்.

இ. காலம் காட்டாது ஈ) மூவிடங்களிலும் வரும்.

32. எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொள்வது?

அ. அடிமறி மாற்றுப் பொருள்கோள் ஆ. கொண்டுக்கூட்டுப் பொருள்கோள்

இ. மொழிமாற்றுப் பொருள்கோள் ஈ. நிரல் நிரைப் பொருள்கோள்.

33. பாரதிதாசனுக்கு பொருத்தமற்றது எது ?

அ. இலக்கண நூல்கள் புதிதாக இயற்றுதல் வேண்டும்.

ஆ. எளிய நடையில் தமிழ் நூல்கள் எழுதிட வேண்டும்.

இ. செந்தமிழை செழுந்தமிழாய்ச் செய்திட வேண்டும்.

ஈ. இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழில் மொழியில் இயற்றுதல் வேண்டும்.

34. எந்த ஊரில் எந்த நாட்டில் என்று காண்போமோ என்றவர்?

அ. சுரதா ஆ. கி. வா .ஜகநாதன் இ. கண்ணதாசன் ஈ. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

35. பாடநூல் ஆசிரியர் கா.நமச்சிவாயம் பிறந்த ஊர்?

அ. கூடியம் ஆ. காவேரிபாக்கம் இ. மல்ல சமுத்திரம் ஈ. திருவள்ளூர்

36)' தமிழர் திருநாள் தை முதல் நாளாம் அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள் என்றவர்?

அ.அண்ணா ஆ.நா.பிச்சமூர்த்தி இ.முடியரசன் ஈ.புதுமைப்பித்தன்

37) சரியானதைத் தேர்க

அ.பூவிழித் தந்தாள் ஆ.செய்துப் பார்த்தான் இ.காண்கப் படம் ஈ.கொக்குக் கால்

Download more model question papers visit www.tnpsctamil.in

38) சட்டம் எனபதற்கு -------- என்பது பொருள்.

அ.செம்மை ஆ.நடுவுநிலைமை இ.கடமை ஈ.உரிமை

39) தொல்காப்பியச் செம்மல் யார்?

அ.கம்பன் ஆ.வால்மீகி இ.தமிழன்பன் ஈ. ரா.பி.சேதுப்பிள்ளை

40) முன்னறிப் புலவர் யார்?

அ.கவிமணி ஆ.பாரதிதாசன் இ.பாரதியார் ஈ.கூலவணிகன்

41. ஜி.யு.போப் தஞ்சையில் பணியாற்றிய காலம்?

அ. 10 ஆ. 8 இ. 5 ஈ. 7

42. வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவர் எனக் கூறியவர்?

அ. சி.வை.தாமோதரம், ஆ. ம.பொ.சிவஞானம் இ. ரா.பி. சேது பிள்ளை. ஈ. இராகவனார்

43 .தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து குறையாத உகரம்

அ. குற்றியலுகரம் ஆ.முற்றியலுகரம் இ. குற்றியலிகரம் ஈ. ஐகார குறுக்கம்.

44. இருபதாம் நூற்றாண்டு கவிதை வானில் ஒளிநிலவாய் பவனிவந்த பெருங்கவிஞர்?

அ. பாரதியார் ஆ. ந .பிச்ச மூர்த்தி இ. பாரதிதாசன் ஈ. சுரதா.

45. முத்தே பவளமே மொய்த்த பசும் பொற்சுடரே சித்தேஎன் னுள்ளத் தெளிவே எனப் பாடியவர்?

அ. தாயுமானவர் ஆ. குமரகுருபரர் இ. கம்பர் ஈ . வள்ளலார்.

46. தீங்குடை மனப்போக்கர் வாழும் நாட்டில் தென்படுமோ மொழியுணர்ச்சி? - என்றவர்?

அ. முடியரசன் ஆ. சுரதா இ. கண்ணதாசன் ஈ. வாணிதாசன்

47. நீலவான் மறைக்கும் ஆல்தான் ஒற்றைக்கால் நெடிய பந்தல்! - ஆசிரியர் ?

அ. பாரதிதாசன் ஆ. பாரதியார் இ. வாணிதாசன் ஈ. சுரதா

48 . நாங்கள் கவிராசர்கள்" என்று செருக்குடன் கூறிய புலவர்களின் செருக்கை அடக்கும்படி, கவி என்பதற்கு குரங்கு என்னும் பொருள் தோன்றுமாறு பாடியவர் ?

அ. பாரதிதாசன் ஆ. வாணிதாசன் இ. காளமேகபுலவர் ஈ. சுரதா

**Download more model question papers visit www.tnpsctamil.in**

49. (i) காந்தி புராணம் பாடல்கள் : 2034 பாடல்கள்

(ii) இராமலிங்க சுவாமிகள் பதிகம் : 409 பாடல்கள்

அ. இரண்டும் சரி ஆ. இரண்டும் தவறு இ. i சரி ii தவறு ஈ . i தவறு ii சரி

50. "மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்" வரிகள் இடம்பெற்ற நூல் ?

அ. தமிழ்ப்பசி ஆ. இனியவை நாற்பது இ. வில்லிபாரதம் ஈ. நளவென்பா

51) வான்மழை. இலக்கணக்குறிப்பு

அ. 5 ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

ஆ. 6 ஆம் வேற்றுமை தொகை

இ. 4 ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

ஈ. பண்புத்தொகை

52) யாருடைய சிந்தனை புதிது தனித்துவம் வாய்ந்தது ?

அ. பாரதியார் ஆ. பாரதிதாசன் இ. காமராசன் ஈ. தாராபாரதி

53) தற்பரன் - பொருள் ?

அ. நடிகன் ஆ. எமன் இ. கரிகாலன் ஈ. இறைவன்

54) பகைவர் வெகுண்டு நோக்கிய கண் வேல்கொண்டு எரியும்போது இமைத்துவிடுமாயின் வீரருக்கு அதுவே தோல்வி என கூறும் நூல்?

அ. புறநானூறு ஆ. நற்றிணை இ.திருக்குறள் ஈ. கலித்தொகை

55) பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி நட்ட கல்லும் மூதூர் நத்தமும் என கூறும் நூல் ??

அ. புறநானூறு ஆ. திருவாரூர் மும்மணிக்கோவை இ. அகநானூறு ஈ. குறுந்தொகை

56) பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது என்னும் குறட்பாவில் பயின்று வரும் அணி எது??

அ) உவமையணி ஆ) எடுத்துக்காட்டு உவமையணி இ) வேற்றுமை அணி ஈ) தொழில் உவமையணி

57. கீழ்கண்டவைகளில் எவை எவை சரியான கூற்று என தேர்வு செய்க

கூற்று 1: சந்தி வர வேண்டிய இடத்தில் புள்ளியில்லாத எழுத்து வந்தால் அதனை சாரியை எனக் குறிப்பிட வேண்டும்.

கூற்று 2: சாரியை வர வேண்டிய இடத்தில் புள்ளி பெற்ற எழுத்து உயிர் ஏற இடமளித்து வந்தால் அதனை எழுத்துப் பேறு எனக் குறிப்பிடல் வேண்டும்

அ) 1 மட்டும் ஆ)2 மட்டும் இ)1 ,2 ம் சரி ஈ) எவையுமில்லை

**Download more model question papers visit www.tnpsctamil.in**

58. கீழ்வருவனவற்றுள் மாறுபட்டது எது ?

அ) கொடி ஆ) நெடுங்கண்ணாள் இ) வீணாபதி ஈ) தடங்கண்ணாள்

59. ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மான வனுக்கு வகுப்பது பரணி என்று குறிப்பிடும் நூல் எது ??

அ) பன்னிரு பாட்டியல் ஆ)தொல்காப்பியம்

இ)இலக்கண விளக்கப் பாட்டியல் ஈ) இவற்றில் எதுவுமில்லை

60. கிராமியச் சந்தங்களுடன் புதுப் பார்வை திகழப் படிமக் கவிதைகள் பலவற்றை எழுதியவர் ?

அ) அப்துல் ரகுமான் ஆ)மேத்தா இ) நா.காமராசன் ஈ) ந.கருணாநிதி

61. கீழ்க்கண்ட கூற்றை ஆராய்க

1) முனிவரும் பார்ப்பாரும் ஆநிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகும் - நச்சினார்க்கினியர்

2) கொல்லேற்றைப் பிடித்து நிற்றல் என்பதன் பொருள் மடலேறுதலைக் குறிக்கும்

3) கோவனும் மக்களும் என்று கூறும் நூல் சிலப்பதிகாரம்

4) ஆசிரியரை அய்யர் என்று அழைப்பது வைணவர் மரபு

5) தடுமாற்ற நிலைகளைப் பற்றிக் கூறியவர்-மு.வ

6) வயிற்றுப் பெருமான் பொருட்டு என்று பாடியவர்- திருமுனைப்பாடியார்

அ) 1,5 சரி 2,3,4,6 தவறு ஆ) 1,5,6 சரி 2,3,4 தவறு இ) 2,3,4 சரி 1,5,6 தவறு இ) 1,6 மட்டும் சரி

62. சரியானதை தேர்க

1) சிறந்த சொற்களை சிறந்த முறையில் வைப்பது - வசனம்
2) சொற்களை சிறந்த முறையில் வைப்பது - கவிதை
3) எக்கச்சக்கம் என்பது கன்னட மொழி
4) சுதேசாபிமானம் என்பதன் பொருள் தாய்மொழிப் பற்று
5) தித்திக்கும் தமிழிலே முத்து முத்தாய் பாடல் செய்தவர் - சுரதா

அ) 1,5 சரி 2,3,4 தவறு ஆ) 1,2,3 சரி 4,5 தவறு இ) 5 மட்டும் சரி ஈ) அனைத்தும் தவறு

63. சரியானது எது / எவை?

1) சிலப்பதிகாரம் மேல் உரைப்பொருள் முற்றிய மணிமேகலை முற்றும்

2) வறுமையில் புல்லரிசிக் கூழ் உண்டு வருந்தி இருந்தவன் நலங்கிள்ளி

3) நெடுந்தேர் ஊர்மதி வளவ - இதில் "ஊர்மதி" என்பதன் இலக்கணம் - வினைத்தொகை

4) திருக்குறள் உரை என்ற நூலின் ஆசிரியர் பாரதிதாசன்

அ) 1 மட்டும் ஆ) 2 மட்டும் இ) 1 மற்றும் 3 ஈ) 4 மட்டும்

64. கீழ்கண்ட கூற்றை ஆராய்க

1) சிற்றிலக்கியத்திற்கு இலக்கணம் கூறாத நூல் - வரையறுத்த பாட்டியல்

2) தந்த சிற்பக்கலை நாயக்கர் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்தது.

Download more model question papers visit www.tnpsctamil.in

3) கோனார் என்பது குணப்பெயர்

4) சாத்தான் கன்று ஈனும், சாத்தி புல் தின்னும்

அ) 1,2 சரி 3,4 தவறு   ஆ) 1 சரி 2,3,4 தவறு   இ) 2 சரி 1, 3, 4 தவறு   ஈ) 4 மட்டும் சரி

65. மதலைகள் விழுது! கெம்பு மரகதம் கோவைச் செங்காய்! - பாடியவர்?

அ) பாரதிதாசன்   ஆ) வாணிதாசன்   இ) சிற்பி.பாலசுப்பிரமணியம்   ஈ) பாரதியார்

66 . கூற்று : திங்களூர் திருவையாற்றுக்கு அருகில் உள்ளது
காரணம் : திங்களூர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது

அ) இரண்டும் சரி   ஆ) 1 சரி 2 சரியான விளக்கமன்று   இ) 1,2 இரண்டும் தவறு   ஈ) 1 தவறு 2 சரி

67. இது செய்வாயா என்று வினவியபோது கால் வலிக்கும் என்று கூறுவது எவ்வகை விடை ?

அ) இனமொழி   ஆ) உறுவது கூறல்   இ) ஏவல் விடை   ஈ) எதுவுமில்லை

68. குகப்படலம் எத்தனையாவது படலம்

அ) 10   ஆ) 9   இ) 8   ஈ) 7

69. உன்னேல் பொருள்

அ) நினைக்காதே   ஆ) உண்டோம்   இ) பவித்திரமானது   ஈ) கலந்த

70. இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம் இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை என்ற பாடியவர்?

அ)இயற்கை கவிஞர்   ஆ)மக்கள் கவி   இ)மக்கள் கவிஞர்   ஈ)யாருமில்லை

71. தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்பு சட்டத்தை திருத்தி சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு காமராஜர் எவ்வளவு பங்கு கிடைக்க செய்தார்?

அ.60 %   ஆ.50 %   இ.3.45 %   ஈ.80 %

72. நின்ற சீரின் ஈற்றசையும் வரும் சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவது?

அ.அசை   ஆ.சீர்   இ.தளை   ஈ.அடி

73. தமிழ் மொழியில் கிடைக்கப்பெற்றுள்ள நூல்களுள் மிகப்பழமையான நூல் எது ?

அ.திருக்குறள்   ஆ.அகத்தியம்   இ.தொல்காப்பியம்   ஈ.நாலடியார்

74. பகுதி இடைநிலை விகுதி போன்றவை சேரும் பொழுது ஏற்படும் மாற்றம்?

அ.சந்தி   ஆ.சாரியை   இ.விகாரம்   ஈ.இயல்பு

75. தவறானது எது?

அ.கலிங்கத்துப்பரணியை இயற்றியவர் செயங்கொண்டார்.
ஆ.இவர் கிபி பன்னிரண்டாம் நூற்றாண்டை சேர்ந்தவர்.
இ.பரணிக்கோர் சயங்கொண்டார் என ஒட்டக்கூத்தரால் பாராட்டுப் பெற்றுள்ளார்.
ஈ.கலிங்கத்துப்பரணியில் 599 தாழிசைகள் உள்ளன.

Download more model question papers visit www.tnpsctamil.in

76. கலைக்களஞ்சியங்களை தொடர்ந்து ,புதிய சொற்களுக்கு விளக்கம் தர தோன்றியது எது ?

அ.அறிவியல் கலைக்களஞ்சியம் ஆ.கலைச்சொல் அகரமுதலி
இ.சதுரகராதி ஈ.பேரகரமுதலி

77. திராவிட மொழிகளுக்கு தாய்மொழி தமிழ் என்று வாழ்நாள் முழுவதும் ஆய்வு செய்து நிறுவியவர் ?

அ.திராவிட சாஸ்திரி ஆ.தனித்தமிழ் ஊற்று இ.கால்டுவெல் ஈ.சுந்தரம்

78. இவர் உயர்ந்த பண்பாட்டுக்குரிய பொறுமை, சினமின்மை, நட்பு முதலானவற்றை விளக்கும் 600 செய்யுள்களை நீதி நூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்து நூலாகத் தொகுத்துள்ளார் ?

அ.உமாபதி சிவம் ஆ.உமறுப்புலவர் இ.போப் ஈ.கால்டுவெல்

79.அன்புத்தொண்டர் ஆறுபேரின் வினாக்களுக்குரிய விடைகள் செய்தியின் எப்பகுதியில் இடம் பெறவேண்டும் ?

அ.முகப்பு பக்கம் ஆ.ஒதுக்கப்பட்ட பக்கம் இ.மையப்பகுதி ஈ.கடைசி பக்கம்

80 .பால்வீதி என்பது பலகோடி விண்மீன்களின் தொகுதி என்று மெய்ப்பித்தவர் ?

அ.நிகலஸ் கிராப்ஸ் ஆ.கலிலியோ இ.கோபர்நிகஸ் ஈ.டாலமி

81. சென்னை எழும்பூரில் உள்ள அருங்காட்சியகத்தில் உள்ள காட்சியகங்கள் எண்ணிக்கை ?

அ. 10 ஆ. 16 இ. 13 ஈ. 17

82. ஜி.யு .போப் தாயகத்திற்கு சென்ற பின் எத்தனை ஆண்டுகள் இங்கிலாந்து பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணி புரிந்தார் ?

அ. 12 ஆ. 13 இ. 23 ஈ. 18

83. இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு ,இந்தியன் சஞ்சிகை முதலான ஏடுகளில் எதன் திணை விளக்கங்கள் இடம்பெற்றிருந்தன ?

அ. தமிழ்ப்புலவர் வரலாறு ஆ. புறப்பொருள் வெண்பாமாலை
இ. புறநானூறு ஈ. அகத்தியம்

84. தனிக்குறிலையடுத்துச் சொல்லின் இறுதியில் வரும் ,இடையின மெய்யின் மேல் ஊர்ந்து வரும் உகரம் ?

அ.குற்றியலுகரம் ஆ.குற்றியலிகரம் இ.முற்றியலுகரம் ஈ.இடையின உகரம்

85. இருபதாம் நூற்றாண்டு கவிதை வானில் ஒளி நிலவாய்ப் பவனிவந்த பெருங்கவிஞராக விளங்கியவர் ?

அ.திறம் பாட வந்த மறவன் ஆ.தமிழரின் கவி இ. நபி ஈ.தமிழ்நாட்டு தாகூர்

**Download more model question papers visit www.tnpsctamil.in**

86. கீழ்க்காண்பனவற்றுள் மாறுபட்டதைத் தேர்ந்தெடுக்க

அ. கருவிழி ஆ. பெரியன் இ. பாசிலை ஈ. பொற்குடம்

87.. பொருத்துக.

i. குறிஞ்சி - துடி

ii. முல்லை - மணமுழா

iii. மருதம் - தொண்டகம்

iv. நெய்தல் - ஏறுகோட்பறை

v. பாலை - மீன்கோட்பறை

அ. 3 4 2 5 1 ஆ. 1 2 3 4. இ. 3 4 5 1 2. ஈ. 5 4 3 2 1

88. நாவிற் பொருந்திய பூங்கொடி என்றும் பொய்யாகுலக்கொடி என்றும் இளங்கோவடிகளால் புகழப்பட்ட ஆறு எது?

அ. காவிரி ஆ. வைகை இ. திருமணிமுத்தாறு ஈ. அரிசியலாறு

89. பாரதியார் கூற்றுகளில் தவறானதை தேர்வுசெய்க.

அ. முப்பதுகோடி முகமுடையாள் ஆ. வாழிய செந்தமிழ் வாழ்கநற் தமிழர்

இ. தனியொருவனுக் குணவிலையெனில் ஈ. எங்கள் பகைவர் எங்கோமறைந்தர்

90. பொருத்துக.

i. அண்டகப் பகுதியின் உண்டகப் பிறக்கம் - மருத்துவஅறிவு

ii. தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த - மண்ணியல் அறிவு

iii. செம்புலப் பெயர் நீர் போல - பொறியியல்அறிவு

iv. உடம்பார் அழியின் உயிரார் அழிவர் - விண்ணியலறிவு

அ. 3 4 2 1 ஆ. 1 2 3 4 இ. 2 3 4 1 ஈ. 4 3 2 1

91. ஆந்திராவில் செயல்படுத்தப்பட்ட பட்டிசீமா திட்டத்தின் கீழ் கிருஷ்ணா நதியுடன் எந்த நதி இணைக்கப்பட்டுள்ளது ?

அ. துங்கப்பத்திரா நதி ஆ.மூசி நதி இ. கோதாவரி நதி ஈ. மகாநதி

92. தற்போதய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி எத்தனையாவது நீதிபதி

அ. 40 ஆ. 41 இ. 42 ஈ. 43

93. Smart City திட்டத்தின்கீழ் , பிரான்ஸ் நாடு கீழ்கண்டவற்றில் எந்த நகரத்திற்கு , பொலிவுறு நகரமாக மாற்ற உதவி செய்ய உள்ளது?

அ. நாக்பூர் ஆ. அகமதாபாத் இ. வாரணாசி ஈ. விசாகப்பட்டினம்

**Download more model question papers visit www.tnpsctamil.in**

94. பிரதமரால் தங்க முதலீட்டுத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட நாள் ?

அ. 04-11-2015 ஆ. 05-11-2015 இ. 06-11-2015 ஈ. 07-11-2015

95. எந்த மாநிலம் உள்ளாட்சி தேர்தலில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீடு அளித்துள்ளது ?

அ. மத்திய பிரதேசம் ஆ. இராஜஸ்தான் இ. கேரளா ஈ. குஜராத்

96. உலகிலேயே முழுவதுமாக சூரிய மின்சாரத்தில் செயல்படும் முதல் விமான நிலையம் எங்கு அமைந்துள்ளது?

அ. கொச்சி ஆ. மும்பை இ. கொல்கத்தா ஈ. டெல்லி

97. Operation Amla ஒத்திகையின் போது விபத்துகுள்ளான கடலோர காவல்படைகளுக்கு சொந்தமான விமானத்தின் பெயர் ?

அ. CG 790 ஆ. CG 791 இ. CG 792 ஈ. CG 793

98. 10வது உலக ஹிந்தி மாநாடு நடைபெற்ற இடம் ?

அ. அகமதாபாத் ஆ. வாரணாசி இ. போபால் ஈ. ஜெய்ப்பூர்

99. 2013-2014-ம் ஆண்டிற்கான தேசிய சுற்றுலா விருது பெற்ற மாநிலம் ?

அ. தமிழ்நாடு ஆ. குஜராத் இ. கேரளா ஈ. மும்பை

100. கிரீஸ் நாட்டின் புதிய பிரதமர் ?

அ. மால்கம் டர்புனல் ஆ. அலெக்சிஸ் சிப்ராஸ் இ. நிக்கோலஸ் சர்கோசி ஈ. இவற்றில் ஏதுமில்லை

101. இந்தியாவின் முதலாவது விண்வெளி ஆய்வு செயற்கைகோளின் பெயர்

அ. GSAT ஆ. Nano SAT இ. EDUSAT ஈ. ASTROSAT

102. தேசிய கைத்தறி தினம் ?

அ. ஏப்ரல் 7 ஆ. ஆகஸ்ட் 7 இ. செப்டம்பர் 7 ஈ. டிசம்பர் 7

103. The duels of the Himalayan eagle - என்ற நூலின் ஆசிரியர் ?

அ.சல்மான் ருஷ்டி ஆ. ஜவாத் அக்தர் இ.பரத் குமார் ஈ.ஜெய்ராம் ரமேஷ்

104. உலக இதய தினம் ?

அ. ஆகஸ்ட் 29 ஆ. ஜூன் 29 இ. செப்டம்பர் 29 ஈ. மே 29

**Download more model question papers visit www.tnpsctamil.in**

105. 2022 ஆசிய விளையாட்டு போட்டி நடத்தும் நாடு?

அ. இந்தியா ஆ.சீனா இ.ஜப்பான் ஈ. வங்கதேசம்

106. தற்போதைய மணிப்பூர் ஆளுநர் ?

அ. திரிபாதி ஆ.சண்முகநாதன் இ.சயத் அகமத் ஈ. ராம்நாத் கோவிந்த்

107. National literacy award '2015-க்குத் தேர்வு செய்யப்பட்ட மாவட்டம் ?

அ. கன்னியாகுமரி ஆ. பாஷ்தர் இ. திருவனந்தபுரம் ஈ. துப்ரி

108. இந்தியாவின் தற்போதைய மத்திய நிதித்துறைச் செயலர் ?

அ.ரத்தன் வாட்டல் ஆ.சுரேந்தர் சிங் இ.பிரகாஷ் மிஸ்ரா ஈ.சச் தேவ்

109. கீழ்க்காணும் மருந்துகளில் CSIR ஆய்வுக்கூடத்தில் இயற்கை மூலிகையைப் பயன்படுத்தி சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்த ரூ.5 செலவில் கண்டறியப்பட்ட ஆயுர்வேத மாத்திரை எது ?

அ.GENVOYA ஆ. BGR 34 இ.KEYTRUDA ஈ. ADDYI

110. Mission Smokeless Village தொடங்கப்பட்ட மாநிலம் ?

அ.தமிழ்நாடு ஆ.கேரளா இ.தெலுங்கானா ஈ.கர்நாடகம்

111. Batua - என்ற Application உடன் தொடர்புடைய வங்கி ?

அ. ICICI ஆ. SBI இ.Indian Bank ஈ. HDFC

112. தேசிய பேரிடர் மீட்புப் படையின் முதல் பெண் கமாண்டர் ?

அ.ரேகா நம்பியார் ஆ.ராஜேஸ்வரி இ.மீனாக்ஷி மதன் ராய் ஈ.அபர்ணா

113. உலக நல்வாழ்வு தினம் ?

அ. ஏப்ரல் 21 ஆ.ஏப்ரல் 7 இ. மார்ச் 21 ஈ. பிப்ரவரி 21

114. இந்திய இலங்கை இராணுவக் கூட்டுப்பயிற்சி Exercise Mitra Sakthi ' 2015 நடைபெற்ற இடம் ?

அ.திரிகோணாமலை ஆ.பூனா இ.திருவனந்தபுரம் ஈ. ECR

115. SKY MUSTER செயற்கைக்கோளுடன் தொடர்புடைய நாடு ?

அ.அமெரிக்கா ஆ.ரஷ்யா இ.சீனா ஈ.ஆஸ்திரேலியா

**Download more model question papers visit www.tnpsctamil.in**

116. முருகன் என்பவர் ஒரு எண்ணை 25 ஆல் பெருக்குவதற்க்கு பதிலாக 75ஆல் பெருக்க அவருக்கு கிடைத்த விடையானது சரியான விடையை விட 10000அதிகம் எனில் அந்த எண் என்ன?

அ.200 ஆ.150 இ.250 ஈ.225

117) Aஎன்பவர் B-ஐ விட மூன்று மடங்கு திறமையானவர் மற்றும் B ஐ விட ஒரு வேலையை முடிக்க 30 நாள் குறைவாக எடுத்துக் கொள்கிறார் எனில் B மட்டும் அதே வேலையை முடிக்க எடுத்துக் கொள்ளும் நாட்கள்?

அ.45 ஆ.55 இ.60 ஈ.65

118) 2a×1a=41a மற்றும் 2b×1b=37bஆகிய பெருக்கல்களில்"a" மற்றம் "b" என்பன மிகை எண்களைக் குறித்தால் a+b ன் மதிப்பு யாது?

அ.11 ஆ.8 இ.9 ஈ.4

119) 1, 1, 2, 6, ......, 120 , 720 - விடுபட்ட எண்ணைக் காண்க.

அ.12 ஆ.24 இ.60 ஈ.90

120) A என்பவர் ரூ.10000த்திற்கு ஒரு குதிரை வாங்கி அதனை B என்பவருக்கு 10% லாபம் வைத்து விற்றார், B என்பவர் C என்பவருக்கு 10% நஷ்டத்திக்கு விற்றார் எனில் C குதிரையை என்ன விலைக்கு வாங்கி இருப்பார்?

அ.ரூ.10,000 ஆ.ரூ.9,900 இ.ரூ.9,999 ஈ.ரூ.11,000

121) 100 மாணவர்களின் சராசரி மதிப்பெண்கள் 40 என கணக்கிடப்பட்டது. கணக்கிடும் போது 63 மற்றும் 72 என்ற எண்கள் தவறுதலாக 36 மற்றும் 27 என மாற்றி எடுத்துக்கொள்ளப்பட்டது எனில் சரியான் சராசரி கான்க.

அ. 40.72 ஆ. 40.50 இ. 39.28 ஈ. 40.28

122) தனிவட்டியில் குறிப்பிட்ட வட்டிவீதத்தில் அசல் ரூ. 1200 ஆனது ரூ 1632 ஆக 4 ஆண்டுகளில் மாறுகிறது. மேலும் வட்டிவீதம் 1% அதிகரிக்கப்பட்டால் கிடைக்கும் மொத்த தொகை எவ்வளவு ?

அ. 1635 ஆ. 1641 இ. 1670. ஈ.1680

123) ஒரு குறிப்பிட்ட அசல் தொகையானது 2 ஆண்டுகளில் 1260 ஆகவும் 5 ஆண்டுகளில் ரூ. 1350 ஆகவும் மாறுகிறது எனில் அதற்கு வழங்கப்படும் வட்டிவீதம் என்ன ?

அ. 2.5% ஆ. 3.75% இ. 5% ஈ. 7.5%

124) 64 ஆட்கள் ஒரு வேலையை 9 மணி நேரம் வேலை செய்து 17 நாட்களில் முடிப்பர் எனில் 34 ஆட்கள் ஒருநாளைக்கு 8 மணி நேரம் வேலை செய்து முந்தைய வேலை போல் 8/3 மடங்கு வேலையை முடிக்க ஆகும் நாட்கள் எத்தனை ?

அ. 92 ஆ. 98 இ. 96 ஈ. 94

**Download more model question papers visit www.tnpsctamil.in**

125) இரு எண்கள் 3:5 விகிதத்தில் உள்ளன. ஒவ்வோரு எண்ணையும் 10 ஆல் அதிகரிக்க அது 5:7 என்ற விகிதமாக மாறுகிறது எனில் அவ்வெண்கள் யாது ?

அ. 3,5 ஆ. 15,25 இ. 7,9 ஈ. இதில் ஏதுமில்லை

126) முதல் 5 ,3 ன் மடங்குகளின் சராசரி என்ன ?

அ) 18 ஆ) 9 இ) 5 ஈ) 7.5

127. பரிதியில் 80° தாங்கும் நாண் மையத்தில் தாங்கும் கோணத்தின் அளவு ?

அ)80° ஆ)240° இ)160° ஈ)100°

128. ஒருவர் A என்ற இடத்திலிருந்து கிளம்பி B என்ற இடத்திற்கு 40 kmph வேகத்தில் சென்று 50 kmph வேகத்தில் திரும்பி A என்ற இடத்துக்கு வருகிறார் .எனில் சராசரி வேகம் என்ன ?

அ)200/9 kmph ஆ) 400/3 kmph இ) 200/3 kmph ஈ) 400/9 kmph

129. ஒரு பகடை உருட்டும் போது பகா எண் கிடைக்க நிகழ்தகவு ?

அ) ½ ஆ)1/3 இ)1 ஈ) எதுவுமில்லை

130. மாறுபாட்டுக் கெழுவினை கணக்கிடும் வாய்பாடு ??

அ) (Mean / S.D) x 100 ஆ) (S.D / Mean) x 100 இ) (S.D) (Mean) / 100 ஈ) 100 / (S.D) (Mean)

131. ஒரு வட்டத்தின் பரப்பளவு 64π ச.செ.மீ எனில் அந்த வட்டத்தின் சுற்றளவு ?

அ) 8 π ஆ)16 π இ) 512 π ஈ) எதுவுமில்லை

132. சம வாய்ப்பு முறையில் ஒரு சீட்டு எடுக்கப்படும் போது அது Queen ஆக இல்லாமல் இருக்க நிகழ்தகவு ?

அ) 1/2 ஆ) 12/13 இ) 1/13 ஈ) 2/13

133. ரூ 22000/-க்கு 10% வட்டிவீதத்தில் 1 ஆண்டுக்கான கூட்டுவட்டி, தனிவட்டி ஆகியவற்றுக்கான வித்தியாசம் யாது ?

அ) 2200 ஆ) 220 இ) 20 ஈ) 0

134. தவறான எண்ணைக் காண்க ?

1 ,5 ,5 ,9 ,7 , 11 ,11, 15 ,12 , 17

அ) 9 ஆ) 12 இ) 15 ஈ) 1

135. அ மற்றும் ஆ இருவரும் சேர்ந்து ஒரு வேலையை 12 நாட்களில் முடிப்பர் .ஆ மற்றும் இ இருவரும் 15 நாட்களில் முடிப்பர் இ மற்றும் அ இருவரும் 20 நாட்களில் முடிப்பர் .எனில் அ,ஆ,இ மூவரும் சேர்ந்து எத்தனை நாட்களில் முடிப்பர் ?

அ) 15 நாட்கள் ஆ) 20 நாட்கள் இ) 10 நாட்கள் ஈ) 5 நாட்கள்

**Download more model question papers visit www.tnpsctamil.in**

136) 18 பேர் 140 மீட்டர் நீளமுள்ள சுவரை கட்டுவதற்கு 42 நாட்கள் ஆகிறது. எனில் 30 பேர் 100 மீட்டர் நீளமுள்ள சுவரை கட்ட ஆகும் நாட்கள் எத்தனை?

அ) 18 ஆ) 21 இ) 24 ஈ) 28

137) ஒரு குறிப்பிட்ட தொகை 5 வருடங்களில் ரூ. 6,800 ஆகவும் மேலும் 3 வருடங்களில் ரூ 6,080 ஆகவும் முதிர்வு அடைகிறது. எனில் முதலீடு எவ்வளவு?

அ) 6000 ஆ) 5500 இ) 3600 ஈ) 5000

138) ஒரு மிக குறைந்த எண்ணை 5, 6, 7 மற்றும் 8 ஆல் வகுக்கும் போது ஒவ்வொன்றிலும் மீதி 3 கிடைக்க வேண்டும். மேலும் அந்த எண்ணை 9 ஆல் வகுக்கும் போது மீதி வரவில்லை. எனில் அந்த எண்?

அ) 1677 ஆ) 1683 இ) 2523 ஈ) 3363

139) 4 செ.மீ. ஆரம் கொண்ட ஒரு வட்டத்திற்குள் ஒரு பெரிய சதுரம் வரையப்படுகிறது. எனில் சதுரத்தின் பரப்பளவு?

அ) 64 ச.செ.மீ ஆ) 32 ச.செ.மீ இ) 25 ச.செ.மீ ஈ) 16 ச.செ.மீ

140) ஒரு கோளத்தின் ஆரம் இரு மடங்கானால் அதன் கன அளவின் அதிகரிப்பு சதவீதம்?

அ) 100% ஆ) 200% இ) 700% ஈ) 300%

Download more model question papers visit www.tnpsctamil.in

விடைகள் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஈ | 21 | இ | 41 | ஆ | 61 | ஆ | 81 | இ |
| 2 | அ | 22 | ஈ | 42 | இ | 62 | ஈ | 82 | இ |
| 3 | ஆ | 23 | அ | 43 | ஆ | 63 | ஈ | 83 | ஆ |
| 4 | அ | 24 | இ | 44 | இ | 64 | அ | 84 | இ |
| 5 | அ | 25 | இ | 45 | அ | 65 | ஆ | 85 | ஆ |
| 6 | அ | 26 | இ | 46 | அ | 66 | ஆ | 86 | ஈ |
| 7 | ஈ | 27 | ஈ | 47 | அ | 67 | ஆ | 87 | அ |
| 8 | ஆ | 28 | அ | 48 | இ | 68 | ஈ | 88 | ஆ |
| 9 | ஆ | 29 | அ | 49 | அ | 69 | அ | 89 | ஈ |
| 10 | ஆ | 30 | ஈ | 50 | ஆ | 70 | அ | 90 | ஈ |
| 11 | ஆ | 31 | ஈ | 51 | அ | 71 | அ | 91 | இ |
| 12 | ஈ | 32 | அ | 52 | இ | 72 | இ | 92 | ஈ |
| 13 | இ | 33 | ஈ | 53 | ஈ | 73 | இ | 93 | அ |
| 14 | அ | 34 | இ | 54 | இ | 74 | இ | 94 | ஆ |
| 15 | அ | 35 | ஆ | 55 | ஆ | 75 | இ | 95 | ஈ |
| 16 | இ | 36 | இ | 56 | ஆ | 76 | ஆ | 96 | அ |
| 17 | அ | 37 | ஈ | 57 | இ | 77 | ஆ | 97 | ஆ |
| 18 | இ | 38 | அ | 58 | ஈ | 78 | இ | 98 | இ |
| 19 | இ | 39 | இ | 59 | இ | 79 | அ | 99 | ஆ |
| 20 | ஈ | 40 | இ | 60 | இ | 80 | ஆ | 100 | ஆ |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 101 | ஈ | 111 | ஆ | 121 | அ | 131 | ஆ | | |
| 102 | ஆ | 112 | அ | 122 | ஈ | 132 | ஆ | | |
| 103 | இ | 113 | ஆ | 123 | அ | 133 | ஈ | | |
| 104 | இ | 114 | ஆ | 124 | இ | 134 | ஆ | | |
| 105 | ஆ | 115 | ஈ | 125 | ஆ | 135 | இ | | |
| 106 | ஆ | 116 | அ | 126 | ஆ | 136 | அ | | |
| 107 | ஆ | 117 | அ | 127 | இ | 137 | ஈ | | |
| 108 | அ | 118 | அ | 128 | ஈ | 138 | ஆ | | |
| 109 | ஆ | 119 | ஆ | 129 | அ | 139 | ஆ | | |
| 110 | ஈ | 120 | ஆ | 130 | ஆ | 140 | இ | | |

Download more model question papers visit www.tnpsctamil.in